# எதி / புதி ~

# ரும்...

## (கவிதைகள்)

- ஈவெராதாசன் -

கண்டி. மு. ராமச்சந்ரன்

(ஆர் முத்துக்கருப்பான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதி / புதி ~ ரும்...

## (கவிதய்கள்)



- ஈவெராதாசன் -
கண்டி. மு. ராமச்சந்ரன்
(ஆர் முத்துக்கருப்பன்)

සාපේක්ෂව..

(කවි)

-ඊවෙරාදාසන්-

කන්ඩි මු රාමචන්ද්‍රන්

(රා. මුත්තුකරුප්පන්)



❖ My thanks are due to
Sinhala Newspaper Cartoonists
Who provided me the sperms
For my literary creations!



# CONTRAST

## (Poetry)

**- Eeveraadhaasan -**

**Kandy M. Raamachandhran**

(R. Muthucarupan)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விடிவை நோக்கி-கவிதய்கள் - 1987
2. கவிதய்-கவிதய்கள் - 1987
3. சிறுவர் மாலை பாடல்கள் - 1993-2004
4. தேயிலைதோட்ட மக்கள் பாடல்கள் - 1996
5. இடைவெளி-குறு நாடகங்கள் - 1997
6. தமிழ் எழுத்து சீர்திருத்தம் - 1998
7. சிங்கள எழுத்து சீர்திருத்தம் - 1998
8. சிறுவர் இலக்கியச் சிந்தனைப் பாடல்கள் - 2001
9. சிறுவர் இலக்கியம்-இசைக் கவிதய்கள் - 2001
10. சிறுவர் பாடல்கள் - 2002
11. දේශපාලන - කවි - 2003
12. Politics/Polytricks-Poems - 2003
13. மரபுக் கவிதை எழுத... - 2003
14. சிறுவர் சிந்தனைக்கு-பாடல்கள் - 2003
15. தேயிலைத் தோட்ட மக்கள் சிந்தனைப் பாடல்கள் - 2010-2004
16. சிறுவர் விழிப்புணர்ச்சிப் பாடல்கள் - 2004
17. தேர்தல்-கவிதய்கள் - 2004
18. மக்கள் இலக்கியம்-இசைக் கவிதய்கள் - 2004
19. கதம்பம் (புதுக்/இசைக்- கவிதய்கள் - 2001
20. புரட்சிக் கவிதய்கள் - 2004
21. குறும்பா, சைனீஸ், ஹைக்கூ, வெண்பா - 2005
22. கூட்டத்தில் குடிநின்று-சிறுகதைகள் - 2005
23. மலையாண்டி-குறு நாடகங்கள் - 2005
24. மக்கள்-இலக்கியக் கவிதய்கள் - 2005
25. மக்கள் கலை இலக்கியம் - கவிதய்கள் - 2005
26. வெற்றி - கவிதய்கள் - 2005
27. பாரதியார்?- கவிதய்கள் - 2005
28. தாயுள்ளம் - சிறுவர் பாடல்கள் - 2006
29. பாரம்பரியம் பல்லினக் கவிதய்கள் - 2006
30. பற்று- கவிதய்கள் - 2007
31. அந்த நாள் - கவிதய்கள் - 2007
32. நிவேதித்தா- கவிதய்கள் - 2007
33. அன்னய் திரேசா- கவிதய்கள் - 2008
34. சிந்தனைக் துளிகள் (கதம்பம்) - 2008
35. பாரதிக்குச் சமமான - கவிதய்கள் - 2008
36. இருபுறம்- கவிதய்கள் - 2009
37. (தடு) மாற்றமா? - கவிதய்கள் - 2008
38. மண்வாசனய் - கவிதய்கள் - 2009
39. புதய்யல்- கவிதய்கள் - 2009
40. எதிர்மறய்- கவிதய்கள் - 2010
41. மரபுக் கவிதய்க்கு மார்க்கம் - 2010
42. கன்னத்தில் முத்தமிட்டால் (கவிதய்கள்) - 2010
43. ஆதங்கம் - இசைக் கவிதய்கள் - 2011
44. சிந்தனைக்கு - கவிதய்கள் - 2011
45. தேயிலைத்தோட்ட மக்கள் - கவிதய்கள் - 2011
46. அ-ப(வ்)த்த-பாடல்கள் - 2011

சஞ்சிகய் - கவிதய் - 1997...

முன்னர் வெளியிட்ட நூல்கள் - Bibliography

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47.

# எதிரும் புதிரும் கவிதய்கள்...

ஆசிரியர் : கண்டி எம். ராமச்சந்ரன் (ஈவெராதாசன்) - ஆர் முத்துக்கருப்பன் -



முதல் பதிப்பு : 2011-10-22 (22-10-1899)

வெளியீடு : 2012-01-07 (07-01-1934)

கணினி ஆக்கம் : *திருமதி வசந்தி செந்தில் குமரன்*

வெளியிடுபவர் : ***M. Raamachandhran***
***RAAMACHANDHRAAS***
2/1 Riverdale Junction
Aniwaththa
Kandy-20,000
SHRI LANKA-0094

ஆக்கங்கள் : 36

பக்கங்கள் : 68+04=72

பிரதி விலய் : ரூ.275/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரய்...

❖ செய்த பாவச்
சிறுமய்க்காக வருந்தி
கழுவாய் தேடிக்கொண்டு
சொர்க்கத்துக்குச் செல்வது...
வாழ்க்கய்யின் நோக்கம் அல்ல
இயற்கய்யின் நியதியாக,
கலய்கள் மற்றும்
அறிவியல் முன்னேற்றத்தின்
வாயிலாக...
மனித குலம் முழுமய்க்கும்
மகிழ்ச்சியய் உறுதிசெய்வதே
வாழ்க்கய்யின் குறிக்கோள்.
- **வோல்டேர் (Voltare – France)**



❖ சாதி முறய்யய்
வளர்த்து வருவது-இந்து
வேதங்களும் சாத்திரங்களுமே
இத்தகய்ய சாத்திரப் பேய்களய்த்
தவறு என்று எடுத்துக்காட்டி
மனித உரிமய்யய் வளர்க்க
முன்வராமல்...
வேதசாத்திரப் பேய்களுக்கு
ஆதரவாகப் பொய் உரய்ப்பது...
உழய்க்கும் மக்களய்
ஏமாற்றுவதே ஆமே!
- **எம். வி. சுந்தரம்** -

***

**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. சொல்லு பாப்பா!





❖ சொல்லு பாப்பா! – நீ
சொல்லு பாப்பா! - இங்கே
சுதந்திரம் யாருக்கென்றே
சொல்லு பாப்பா!

❖ கட்டத் துணி
யில்லா தோர்
கடல் அளவே!-குடிக்கக்
கஞ்சி யில்
லாதோ ரும் - அக்
கடல் அளவே!



❖ ஓட்டுக் குடிசய்களில்
ஓராயிரத் திடய்
ஓரிரு மாளிகய்
உல்லா சபுரி!

❖ வேலய் தேடி
வாலிபர் கள்
வீதி அளப்பு! - உடன்
வீடில்லா தோர்
பட்டா ளமும்
வீதி யோரத்தில்!



❖ வீதி யோரப்
பிச்சய்க் காரர்
நாடி வருகய் - கண்டு

- கண்டி மு. ராமச்சந்ரன் -
(ரா.முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்று நாட்டு
உல்லா சிகள்
பார்த்து ரசிப்பே?

❖ நாறும் இந்த
சன நாய் அக
அமய்ப்பு முறய்
மாறும் வரய்க்கும்-இச்
சீரழி வும்
சிறுமய் எல்லாம்
சாசு வதமே!



❖ சன நாய்
அகத்துக் குள்ளே
சோச லிசத்தய்ப்-புகுத்திப்
பெயர் மாற்றத்தால்...
கண்ட பலன்
சிதய்வு கட்கு...
மேலும் சிதய்வே?
(Plight of have-nots?)

***

## 02. கும்மி அடி?



பாரதி
கனவு கண்ட
புதுமய்ப் பெண்ணய்ப்
பார்க்க விரும்புவோர்-இங்கே
யாரும் வரலாம்!

- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சரிநிகராய் ஆணுக்குச்
சமமாகப் பெண் இருந்தே
சாறாயம் கள்ளய்ச்
சரளமாக அருந்தும்
ஆனந்தக் காட்சி காண்!

❖ மடய் மயய்
முழுதாகக் கொளுத்த
மார்தட்டி வந்துவிட்டார்-எம்
மாதரிசிகள்!

❖ "ஆரியர் புலயருக்கு
அடிமய் ஆகினர்" என்று
நீ பாடியதய்
அடித்துவிட்டு – நீயும்
செல்லம் மாவுடன்
சேர்ந்தே ஜோடியாகக்
கூடி... இவர்களுடன்
ஓரிரு "கிலாஸ்"
கள்ளருந்திக் களித்தே
கண் சிவந்தே...
"கன்னத்தில் முத்தமிட்டால்
மனந்தான்... மணத்துடன்
கண் சிவந்தே-செல்லம்மா!
கள்வெறி
கொள்ளுதடீ!" என்றே
பாடி மகிழலாம்?



**ஈவெராதாசன்**
**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**(ரா. முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ "சாதிகள் இல்லயடீ
பாப்பா!" வென்றே-நீ
அன்று பாடித்
தொலய்த்தது – உந்தன்
செந்துமிழ் நாட்டிலே
இன்று வரய்யில்
அழுலாக வில்லய்தான்...
அதனால் என்ன!
உந்தன்
செந் தமிழர்கள்
சென்ற நாடுகளில்
எல்லாமே "ஓ! ஏய்!"
அவற்றய்ச் சீரழிக்காது...
கீழ் மேல் நடுச்
சாதிகள் என்றே
போற்றிப் பாதுகாப்பே?

❖ சிறு மதியர் என்பதற்கு
மறு பெயர்தாம்-செந்
தமிழர் எனப்படுவதோ?



❖ அன்று இலங்கய்யய்
ஆண்ட எங்கள்
திராவிட ராவணனய்
அழித்த – உந்தன்
ஆரிய ராணியின் கய்
இன்றும் மேலோங்கியே?
(Brahmanism)

***

**கண்டி எம். ராமச்சந்ரன்**
**- கண்டி மு. ராமச்சந்ரன் -**
**ஈவெராதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. நிலய்மய்?

❖ நாதி யற்றே
இருந் தாலும்
நடுத் தெருவிலே…இத்
தமிழ்ச் சமுகம்
சாதி எனும்
சகதி யிலே
சிக்கி என்றும்
சீர ழிதல்
சிதய்வே கண்டோம்!

❖ சீர் திருத்தம்
எனப் பேசிக்
கடய் நடத்தும்
சிறுமதி யரயும் நம்பி
மோசம் போனோம்!

❖ சோச லிசம்
எனப் பேசி
வேஷம் போட்டே
தோழர் ஆனோர்…
விவசாயி தொழி
லாள ரய்ப்
பகடய்க் காயாய் ஆக்கியே
தலய்வ ராகித் - தாம்
கிழவ ரானார்?
(Miss – Leaders)



***

- ஆர். முத்துக்கருப்பன் -
(ரா.முத்துக்கருப்பன்)
ஈவெராதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சலிப்பு

❖ வாடகய்க்கு
மாறி மாறி – பல
வீடு தேடிக்
கிழ டான – பல்
கலய் ஞருக்குச்
சின்னச் சின்ன
வீடு பெற்றுக்
கொடுப்ப தற்கே
கலய் கலாச்
சார அமய்ச்சர்
வீறு நடய்
போடு வதாய்
ஊடக விளம்பரமே!



❖ தேர்தல் கால
தெரு நாய்க்
குரய்ப்பே என
தெரிந்தும் என்ன...
கலய்ஞர் களோ
நடுத் தெருவிலே
திருஓடும் கய்யுமாக!

❖ நாதி யற்று
ஒரு கலய்ஞன்
நடுத் தெருவில்
செத்தான் என்றால்...

**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**
**(ஆர். முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈடு செய்ய
முடி யாத
ஒரு சிறந்த
நற் கலய்ஞனய் - இந்தத் திரு
நாடு அய்யோ!
இழந்த தென்"றே
மேடய் யிலே...
பாடய் யிலே
அவனய் வய்த்தே
மந்திரி அமய்ச்சர்
இரங்கல் உரய்...
ஊரய் ஏய்க்க?



❖ சவப் பெட்டி
அன்பளிப்புச் செய்த
கலய் கலாச்சார
அமய்ச் சருக்கு
ஒரு கவிஞர்
நன்றிப் பா
புனய்ந்து பாடல்?



❖ வீடு கிடய்க்காது
அக் கலய்ஞன்
வீதியில் செத்தாலும்...
அவனய் - இடு
காடு செல்ல உதவிய
அமய்ச்சருக்கு நன்றி?
(Poet Laureate)
***

**- கண்டி மு. ராமச்சந்ரன் -**
**(ரா.முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. ஏக்கம்!

❖ தொழிலாளர் களின்
தொல்லய் துயரமெல்லாம்
என்றென்றும்
மாற்றம் எதுவுமின்றி
தேயிலய் ரப்பர்
தென்னந் தோட்டத்திலே
தொடர் கதய்தான்!



❖ தொழிற் சங்கக்
கடய் நடாத்திய
தலய்வர்கள் எல்லாம்
மந்திரி அமய்ச்சராகி
மா மனிதர்களே?

❖ மாற்றம் ஒன்று காண
மக்கள் விரும்பினாலும்
அதற்கு ஆம்!
ஏற்ற ஒரு
அமய்ப்பு இங்கு
ஏற்படா விடில்
ஏற்றம் இல்லய்!



❖ சாதி மதஇன
பேதம் பிரிவினய் மாறாது...
பாதுகாத்து என்றும்
ஆட்சி நடத்துவோர்
அரசியல் வா/வியா-திகளே?
(Politics-politicks)

***

- கண்டி எம். ராமச்சந்ரன் -
(ஆர்.முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. வழி...

❖ ஆதியிலே இருந்த தல்ல
சாதி மத இனமே!
பாதியிலே புகுந்தவய்கேளே!

தலய் நரய்த்த
தாத்தாக்களய் - தூரே
தள்ளி ஒதுக்கி...
இளய்ஞர் யுவதிகள்
தத் தமது வழியில்
தலய் நிமிர்ந்து
புது நடய்
போடாவிடில்....
ஆதியில் ஆம்!
இருந்த நிலய்க்கே
மாற்ற மில்லய்!



❖ பாரதி அய்யர்
அவன் தாசன்
கனக சுப்புரத்தினம்
பாடிய பாடல்களய்ப்
பாடி நடித்த
பாப்பாக்கள்
பல் எல்லாம் விழுந்த
தாத்தாக்களோ-நல்
வழியில் அல்ல-அல்
வழயில் சென்றோர்?

- கண்டி மு. ராமச்சந்ரன் -
(ஈவெராதாசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❖ இன்றய்ய
இளய்ஞர் யுவதிகள்
கய்களில் தாம்-நாளய்ய
புது விடியல் ஆம்!
தஞ்சம்!
(Posterity's Progress)

***

## 7. கய்மாறு....?

❖ கரடி புலி சிங்கம்
நரி நாய் வாழ்ந்த
காட்டய் அழித்துத்
தோட்டம் - புதுப்
பாட்டய் சமய்த்த
பாட்டாளி மக்களுக்கோ....
தோட்டக் காட்டான் என்ற
பட்ட மளிப்பு?



❖ மாதிரிக் கிராமம்
வீடு வாசல்
எங்களுக்கும்
தருவார்கள் என்றே
எதிர் பார்த்தே
ஏமாந்த தோடு...
ஓட்டய் லயத்துக்
காம்புறாவுக்கு
உள்ளாரய் யே எங்களய்ப்

**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**(ஈவெராதாசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டி வய்த்தே...
ரோட்டோரக் காணிகளே
எங்களே ஓரங்கட்டி
நாட்டு ஆளுகளுக்குப்
பிரிச்சுக் குடுத்தே
ஒடுக்கி வய்க்குறாக!

❖ அரசாங்க
உத்தியோகத்துக்கு
மாத்தரந் தானோ?
இனப் பிரதேச
விகிதாசார ஆப்பு...
ஆள் சேர்ப்பு!



❖ ஆனா...
தோட்டக் கூலி
வேலய்க்கும்...
நகர/நரக சுத்தித்
தொழிலாளர்
வேலய்க்கும் அது
அகப்படாதுங்களோ?

❖ இல்லாதவன் முதுகுலே
உள்ளவன் என்றுமே
குதிரய் ஏறுவதுதான்...
சன நாய் அகச் சோசலிசக்
குடி(கெடுக்கும்) அரசியலாமோ?
(Democratic Socialist Republic)

***

**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**(ஆர்.முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. சா/சோ-தனய்



❖ சிறு குழந்தய்கள்
இருவர் பாடி
ஒன்றாக ஓடியாடிக்
கூடிக் கொஞ்சிக்
குலாவியே சிரித்தே
இளய்ஞன் யுவதியாகி
இதயம் ஒன்றி
இணய்ந்தே வாழ
இறுதி முடிவெடுத்தார்!

❖ இதயப் பொறுக்க
முடியாத மிருகமல்ல..
மனித சாதியே
பிரித்து வய்க்க
முனய்ந்த தாலே...
அவ் விருவருமே
நஞ்சருந்தி சவக்குழியில்
இணய்ந்தாமே!



❖ சாதி மத இனக்
கொடுமய் எனும்
சாபக் கேடு-செந்
தமிழருக்கே
தனி யு-டய்/ரி-மய்
என் றிருந்தோம்-அது
தவறு... தவறே!

- கண்டி எம். ராமச்சந்ரன் -
(ஆர்.முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பாரதி அய்யரின்
ஆரிய சிரி லங்கா
சிங்களத் தீவில்
வாழும் சிங்க வம்சச்
சிங்கள வருமே...
அச் சாதி மதக்
கொடுமய்க் கே ஆளாகிச்
சிங்கள இனச் சிறு
இரு கிளிகளய்
அதே இன வனக்
கிழ வேடர்கள்
கொன்றார்களே!



❖ பார் புகழும் / புளுகும்
பாரதத்தில் இருந்தே
பவ்த்தம் இவ் ஆரிய
பாரதி அய்யரின்
சிங்களத் தீவில்
பதியம் போட்டதன்
பக்க விளய்வோ?



❖ பாரதி அய்யரின்
பேச்சய்க் கேட்டு அன்றே
பாலம் அமய்த்திருந்தால்
இங்கும் - பாரதிதாசனின்
நாலு வருணத்தில்
நாலாயிரம் சாதிகள் தாம்?
(Spread of Castism)

***

- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. எதிரும்
கவிதய்

## 09. சிந்தனய்க்கு...



❖ அத்தய் மாமன்
மகன் மகளய்யே
ஒத்து மாறி
மணம் முடித்தல்
சத்தல்ல, வேண்டாம்
என்று சொன்னால்
இத்தரித்திரத் தமிழர்
சம்மதியார்!



❖ கண் கண்ட
தெய்வ டொக்டர்கள்
கண்டு சொன்னார்
என்று சொன்னால்...
காது கண்ணய்
மூடிக் கொண்டு
கனவே காண்பார்!

❖ இத் தீமய்யால்
மூளய் வளர்ச்சி குன்றி
முன்னணியில் நிற்போர்
மூடச் செந்தமிழரே!



❖ இவர்களுக்கு நவ
மூளய்ச் சலவய்
செய்வோருக்கு
மூளய்க் கோளாறே
ஏற்பட்டு விடும்?

- கண்டி எம். ராமச்சந்ரன் -
(ஆர்.முத்துக்கருப்பன்)

முதல் பதிப்பு : 2011-10-22
(22-10-1899)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிரும்
கள்...







❖ முற் போக்குச் சிந்தனய்
இவர்கள் மூளய்யில்
ஏறாவிட்டாலும் என்ன...
சடங்கு சாத்திரச் சாக்கடய்க்
கருமாதி தெவசத்தய்க்
கட்டிக் காப்பதில் மட்டும்
கய்தே(ர்/ய்)ந்த குருடர்கள்!

❖ இருபத் தோராம் நூற்றாண்டின்
ஈடு இணய்யற்ற பழம்
வனவேடரிலும் இழிந்தோர்?
(Incorrigible Race)

***



10. **களய் இலக்கணம்**

❖ கலய் இலக்கியம் என்று
கூறிச் சிலர் இங்கே
கடய் நடத்தல் கேட்டுக்
கண்டு பலர் எங்கும்
மனப் புழுக்கம்!



❖ கள்வர் கயவருக்கே-அவய்
கவசம் என்றே – சான்றோர்
கான்றி உமிழ்வே!





❖ அரசியல் வா/வியா-திகளின்
அடிவருடிகளே
இவர்கள் என்றும்
இலக்க-ம்/ணம்?
(Art and Literature)

***

**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**(ஆர்.முத்துக்கருப்பன்)**

**வெளியீடு** : 2012-01-07
(07-01-1934)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. இளய்ய பாரதத்தின் நாய்?

❖ பழய்மய்யிலே முழுதும்
ஊறிப் போய் என்றும்
உதவாக்கரய்யாய்த் தன்
தலய் குனிந்து கவிழ்ந்து
நிற்கும் பாரதம்...
நிலய் உணர்ந்து என்று
தலய் நிமிர்கிறதோ...
அன்று தான்
முழு உலகமுமே
சமுதாய மாற்றப்
புரட்சிக்கு முட்டி மோதி
முன்வரும் என்றே
சொன்னவன் தான் -
சோசலிச சமுதாய
அமய்ப்பின் ஆதிப்
பிதா மகன்
கா(ர்)ல் மா(ர்)க்ஸ்!
(Karl Marx's Comment)



***

## 12. மலய்யே! உன்நிலய்?

❖ மலய்யகத் தமிழா உந்தன்
நிலய்தனய் எண்ணிப் பாராய்!
கறுவாப் பயிர்செய் கய்க்கு
சிறுகுழு வினராய் வந்து-நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திய வியர்வய் ரத்தம்
மறய்ந்ததே மண்ணோ டுமண்ணாய்!

❖ கோப்பிப் பயிர்செய் கய்க்கும்
கொஞ்சப் பேரய்ப் பின்னால்-கங்காணி
ஏய்ப்பிலே ஓட்டி வந்து-தான்
மேய்ப்பிலே மேன்மய் யுற்றான்!

❖ தேயிலய்ப் பயிர்செய் கய்க்கும்-அவன்
திரட்டியே கூட்டி வந்து
வாயினால் சொல்ல வொண்ணா-துயர்
வாதனய்ப் பட்டு வாழ்வே!

❖ சுதந்திரம் கிடய்த்த தாகச்-சொன்ன
சொல்லிலே மதிம யங்கி-நீயும்
தோத்திரம் துதியே பாடி-
நாடற்றோனாய்
தொல்லயே தோளில் சுமந்தாய்!



❖ காட்டய் யேஅழித் ததோடு-மேலும்
பாட்டய் யும்சமய்த்ததற்கோ-தோட்டக்
காட்டான் எனப்பட் டம்தான்-சேவய்யய்க்
காற்றிலே பறக்க விட்டார்!

❖ வாக்குரி மயய்ப்ப றித்தே
வாய்க்கரி சிபோட்டுக் கொண்டே-
தர்ம
மார்க்கத் தார்தா மென்றே-பவ்த்த
மதத்தினய் தூக்கிக் காட்டே?

**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**(ஈவெராதாசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டுரி மய்பறித் துமென்ன!
நாட்டுரி மய்பறித் துமென்ன!
நாட்டுக் கேஉன் உழய்ப்பய்ச்-சுரண்டும்
நாட்டத் தில்கண் ணுடய்யோர்?

உனதென உரிமய் கோரக்-காணி
ஓரங் குலமும் இல்லய்!-ஆனால்
எனது தோட்டம் இதுவே-என
இனமே காட்டு வாயே?



ஓட்டய் "லய்ன்"அறய் யுள்ளே-நீ
ஓரிரன் டுநூற்று ஆண்டய்-ஆம்!
ஓட்டியே வாழ்ந்திட் டாலும்-
உரிமய் யோ உனக் குஇல்லய்?

வீடற் றோருக் கிங்கே
வீடுகள் கொடுப்ப தாக-விளம்பரம்
மேடயில் கூச்சல் கூத்து-நீயோ
வீடற் றோர்பட் டியிலே?

சங்கங் கள்பல துகளில்-நீ
அங்கமாய் இருந்து மென்ன!-தொடராய்ச்
சந்தாப் பணம்செ லுத்தும்
அந்தகன் ஆனாய் அண்ணே?



பாட்டா ளிவர்க்க மாபெரும்
படய்ஆட் சிவரும் வரய்க்கும்-உன்
ஓட்டாண் டிவாழ்கய் தன்னில்-இல்லய்
ஒருவித மாற்ற மேகான்!

(Proletarian Rule)

***

- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 13. பாதய்...?

❖ சாவு எங்கள்
சின்ன இளஞ்
சந்ததியினரய்க்
காவு எடுத்துக்
கொண்டதே...
"சேகுவேரா"க்
கலவரத்தில் என்றே
கவலய்ப் பட்டோம்!

❖ வழி தவறிச்
சென்றவர்கள் என்றே
ஆட்சியாளர்கள்
வாய்கிழியக் கத்தியதய்ச்
சரி என்றே சகித்து
இப்போ...
விழி பிதுங்கி நடு
வீதியில் நிற்கிறோம்!



❖ "சோசலிசம்" என்றே
பேசிய தோழர்கள் - இப்போ
தோத்திரம் பாடி ஓடி
பணநாயகப் பாசறய்யில்
சனநாயக சோசலிச
மோசடிக் கூட்டில்?



❖ ஏற்றத் தாழ்வய்
மாற்றும் வழி தொடரோ...
கேட்டில்?
(Fake Comrades)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. கூட்டத்தில் கூடிநின்று...

❖ சாதி எனும்
சகதியயச் சந்தனமாய்ச்
சாசு வதமாகத்
தமது உள்ளத்திலே
சுமந்து கொண்டே...
மேடய்களிலே மட்டும்
பேசி முழக்கும்
பித்தர்களயப்
பெரியோராக மதித்து
பின்னடய்வே!

❖ பாரதி பாரதிதாசன்
பாடல்களில் சிலதய்யும்...
எங்கள் தாடிக்காரச்
செந்தமிழ் நாட்டுச்
சொக்ரடீஸ்-ஈ.வெ
ராமசாமிப் பெரியாரின்
சீர்திருத்தக் கருத்துக்களய்...
பாடமாக்கிப்/பாடய்யாக்கி
மேடய்களில் உதிர்த்த
பதடி உளுத்தர்களய்
உத்தமர் என நாம்
மதித்துச் சிதய்வே!



**- கண்டி மு. ராமச்சந்ரன் -**
**(ஈவெராதாசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❖ சொல்லுக்கும் செயலுக்கும்
சொந்தமானவன் அல்ல
உங்கள்
சி. சுப்பிரமணிய
பாரதி அய்யர்...
அதற்குச்
சொந்தமானவன்
எங்கள் புரட்சிக் கவிஞன்
கனக சுப்புரத்தினப்
பாரதி தாசனே - இவனய்
"ஈ.வெ.ரா தாசன்" என்பதே
சாலப் பொருத்தம்!



❖ பூனய்
நிறத்தய் வய்த்துப்
புத்தி புகட்டிய
பாரதி பாடல் - அவன்
வீட்டுக் குள்ளே
எடுபட வில்லய்...
பார்ப்பனச் சகதிச்
சாதிக் குள்ளேயே?



❖ சங்கம் வய்த்துச்
சாதி வளர்க்கும்
சிறு மதியரும் - பாரதியின்
செந்தமிழ் நாட்டினரே...
"பார்! பாப்பா!
பாடு பாட்டாய்?
(Contrast)
***



**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**(ஆர்.முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. கா(ர்)ல் மா(ர்)க்ஸ்

❖ எங்கள் தாடிக்காரன்
கா(ர்)ல் மா(ர்)க்சுக்கு
ஈடு இணய்யாக
எவனும் இல்லய்கான்!



❖ மக்கள் இங்கே
இன்பம் காண்பதற்கு முன்
இன்றியமய்யாத் தேவய்
மதங்களய் ஒழிப்பது...
என்றே பகன்ற
பகலவனும் இவனே!



❖ வர்க்க முரண்பாடுகளய்த்
தர்க்க ரீதியாக விளக்கி
விமர்சித்தவனும் இவனே!

❖ வர்க்க முரண்பாட்டு
வக்கிரத்தய் ஒழித்துச்
சொர்க்கத்தய் இவ்
வுலகிலேயே காண...
தோழிலாளி விவசாயிக்கு
வழிகாட்டியும் இவனே!

❖ வட்டி லாபம் வாடகய்
உபரி மதிப்பு
என்றே கூடிக்
குட்டிபோடும் சுரண்டலய்
புட்டுக்காட்டியோனும் இவனே!

**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**(ஈவெராதாசன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ முதலாளித்துவத்தின்
முதுகெலும்பய் முறிக்கும்
வழியய்க் காட்டிய
முதல்வனும் இவனே!

❖ இவனுக்கு இங்கு
ஈடு இணய்யாக – வேறு
எவனும் இல்லய்...
இவனே!
(Greatness of Karl Marx)

***

## 16. திட்டம்?

❖ பிட்ராத்த மலயத்
தோட்டத்துப் பிரச்சினய்
இப்போ தட்டுப்பட்டுப்
பிட்டு வய்த்ததால் தான்...
இத் தீரர்களது... திருடர்களது...
குட்டு வெளிப்பட்டது?

❖ காணி இல்லாதவனுக்குக்
காணி குடுக்குறோமுண்ணு
எங்கவுட்டுக்
கண்ணேக் கட்டிப்புட்டு
எங்க பரம்பரெக் காணியே
வெளியாருக்குப் பகிர்ந்து
குடுக்கப் பாக்குறானுக...
கட்டய்யிலே போவானுக!



**- கண்டி மு. ராமச்சந்ரன் -**
**(ரா..முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வடக்குக் கெழக்கு
மாகாணத்துலே
திட்டம் போட்டு
நடய்முறய்ப் படுத்துனதே...
இன்று இங்கே
நடய்முறயப் படுத்தி
அடிமய் ஆக்கும் திட்டமோ?

❖ நூத்துக்கு நூறுவீதம்
காணிவீடு இல்லாத
இந்தத் தோட்டத் தொழிலாளிக்கு
துரும்பும் இல்லியோ?
ஓங்க இந்தத்
தோட்டக் காணி பகிர்வு
வீட்டு வசதி வாய்ப்புத்
திட்டத்துலே...
தட்டுவாணிப் பசங்களா!

❖ நம்ம தலவரு
மந்திரி மாருக எல்லாம்
"பார்"லீ மண்டுலே-இஞ்சிதின்ன
மந்திக மாதிரிக்
குந்தி இருந்து - கூடிக்
கும்மாளந் தானோ?



❖ ஓட்டுக் கேக்க
மட்டும் வாங்க...
"நாமெல்லாம்
ஈந்தியாத் தழுழனுக?
(Racial Race)

***

- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. ஞானம்?

❖ வாழ்க்கய்யின் வக்கிரத்தய்த்
தாண்ட முடியாது
தவித்து அழுகிறார்கள்!

❖ தய்ரியம் இல்லாதவர்
தலய் எழுத்தின் மேல்
பழியய்ப் போட்டுவிட்டு
தப்ப முயற்சி!






❖ ராசி பலன் என்ற
மூட நம்பிக்கய்யில் மூழ்கி
சோசியர் சொன்னதய் நம்பி
மோசம் போகிறார்கள்!



❖ வயிர்வளர்க்கும்
மதப் பிரசங்கத்தில்
மதி மயங்கி
சுய சிந்தனய் இன்றிப்
பூசய் ஆரதனய்!
தாயில்லாப் பிள்ளய் போல்
வாயய்ப் பிளந்து கொண்டு...
"அரோகரா?"



❖ விஞ்ஞானச் சிந்தனய்
முயற்சி எல்லாம்
மத அபின் உண்ட
இம் மூடருக்கு...
"அஞ்ஞானம்?"

**கண்டி எம். ராமச்சந்ரன்**
**ஆர். முத்துக்கருப்பன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மதப் பிரசங்க பிரச்சார
விழாக்களய் எல்லாம்
"வீடியோ... ஓடியோப்"
படம் எடுத்தே
"டிவி டெக்கில்" போட்டுக்
காட்டி மயக்கு?



❖ சீறிய சிந்தனய்யாளர்
இத் தொழுகய் வணக்கத்
துதிப்பாடல்களய்ப்
பார்த்தும் கேட்டும்...
துக்கித்து வாய்விட்டு
விக்கிச் சிரிப்பே!



❖ கண் மூக்குக்
காதில்லாத காட்சிக்
கற்சிலய் படங்களுக்குக்
கற்பூர ஒளி காட்டிச்
சாம்புராணிப் புகய்
பிடித்துக் கூவிக்
கத்தி மந்திரம் ஓதல்
பித்தர் செயலே!



❖ தேவாலயம் கோவில்
பன்சலய் பள்ளியில்
ஒளி பரப்புதல் பழய்ய
தூண்டா மணிவிளக்குகள்
அல்ல...
மின்சார "பல்ப்"?
(தோமஸ் அல்வா எடிசன் நினய்வாக)



**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தாடி மீசய்யய்ப்
பழங் கால
வன வேடரய்ப் போல்
வளர்த்து நீட்டிய
பக்திமான்களே... நீங்கள்
காடு செல்லலாமே?
(Cowardice & superstition)



***

## 18. எவ்விடம்?

❖ கடவுள்
இல்லய் என்பவனய்
அவன் தண்டிப்பானாமே?



❖ இறந்த பின்னர் எங்கோ
நரகத்திலே கிடந்து
நலிய வேண்டுமாமே?

❖ கடவுள்
உண்டு என்பவனுக்கோ...
சொர்க்கத்தில் எங்கோ
கடவுளுக்குப் பக்கத்தில்
"குஷன் சீட்" படுக்கய்
"எயர்கண்டிசன் ரூமாம்"?



❖ கல்லய் மரத்தய்ப் படத்தய்க்
கடவுள் என வணங்குவோர்
காட்டுமிராண்டிகள் என்றே
சான்றோர் இகழ்வே!

**- கண்டி மு. ராமச்சந்ரன் -**
**(ரா. முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❖ திக்கய் வணங்குவோர்
பூகோள அறிவு
தெளிவு இல்லார் என்றே
ஆன்றோர் புகல்வே!

❖ உருவம் இல்லாத ஒன்று
ஆணா? பெண்ணா? அலியா?
என்றே தெரியாத போது
அவன் அவள் என்று
விளித்தல் இகழ்வே!

❖ ஆத்தீகனய்ப் படய்த்தவன்
ஆண்டவன் என்றால்...
நாத்தீகனய்ப் படய்த்தவன்
அவன் தாத்தா வா?

❖ கடவுளய்ப் படய்த்தவன்
மனிதனே என்பதய்
உறுதிப் படுத்துபவய்...
எழுத்து வடிவமுள்ள
முந்நூறு மொழிகளும்
எழுத்து வடிவமில்லாத
முந்நூறு மொழிகளுமே!

❖ கடவுள் மதம் எனும்
பெயராலே... பல
பேதம் பிரிவினய்யய்
ஏற்படுத்தித் தனிக்
கடய் நடாத்தும்



**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**
**(ஆர். முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்களின் சூழ்ச்சியே
கடவுள் "நோவ் டவ்ட்"!
(Mythical God and yarn)
***

## 19. ஆண்டி ஆனதென்ன?



❖ ஆறுமுகா!
குறிஞ்சிக் குமரேசன்
குடியிருப்பதாகச்
சொல்லப்படும் குன்றுகளின்
எழிலய்க் கொஞ்ச வய்ப்பவர்
எங்கள்...
வஞ்சிக்கப் பட்ட
கருவா, கோப்பி
ரப்பர், தேயிலய்த் தோட்ட
இந்திய வம்சாவளித்
தமிழ்த் தொழிலாளரே!

❖ ஒரு விடயத்தில் மட்டும்
அவனுக்கும் இவர்களுக்கும்
ஒருமய்ப்பாடு உண்டு...
அவனும் இவர்களும்
கோவ-ன/ண ஆண்டிகளே!

❖ தெய்வானய் வள்ளி
சமேதராய்
தேயிலய் ரப்பர்
தோட்டத்தில் இருப்போர்...



- கண்டி மு. ராமச்சந்ரன் -
(ரா. முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரிய கங்காணிமாரே!
தெய்வானய்
தென் இந்தியாவில்...
வள்ளி இலங்கய்த்
தேயிலய் ரப்பர் வனத்தில்?

❖ ஆனால் -
பெயர் தான்
கருப்பன்
கருப்பாயி சிவப்பாயி என்று
மாறி வருகிறது...
பெரிய வீட்டுக்காரி
சின்ன வீட்டுக்காரி என்றே
சிறப்புப் பெயரும்
இத் தேவியருக்கு உண்டு!



❖ தென்னிந்தியச்
சீர் கெடுக்கும்
சினிமாப் படக் காட்சியால்...
இப்போ எங்கள்
மலயகச் சிறுவர்
சிறுமிகளின் பெயர்கள்
நடிகர் நடிகய்களின்
பெயராக மாற்றமே...
இது-தனிச் சிறப்பே!
மாடசாமியும் முனியாண்டியும்...
மற(ய்)ந்து போனார்கள்?

**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**
**ஆர். முத்துக்கருப்பன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ "எட்டடிக் குச்சுக்குள்ளே
- சுப்பய்யா! - நீ
எத்தனய் நாள் இருப்பாய்?"
என்ற பக்திப் பாடல்
இருவருக்கும் பொறுத்தமே...
ஓட்டுத் தகரக் கூரய்
ஓட்டய் "லயின்" அறய்யில்
ஒரு நூற்றுத் தொன்
னூறு வருடங்களாய்
தொடர்ந்து குடியிருப்பு...
"ஒரு கோப்பயிலே – தினம்
தண்ணி யடிப்பு? இறப்பு!"



❖ உடுக்கடிக்க வரும்-தேர்தல்
புரட்டுக்கார பூசாரிகள்...
முருகன் மட்டும்
மலய்ஏறி விட்டதாக
மகிடி யூதி-அவன்
திரும்பி வரும்வரய்-மக்களய்ப்
பொறுத்திருக்கச் சொல்கிறாரே?-கய்யில்
எடு செருப்பய்!
(Capitazation of Ignorance)

***

## 20. முதுகெலும்பு?

❖ கட்டு மரம் கட்டிப் படகில்
கடல் மார்க்க மாக
சி. சுப்பிரமணிய அய்யரின்
ஆரிய சிங்களத் தீவுக்கு...
"ஆரியர் புலய்யருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிமய்கள் ஆகினர்" என்றே
வந்து – பின்
காட்டு மார்க்கமாகக்
கால் நடய்யாகக்
கண்டிக் கதிர்காம
வேலவனய்
வள்ளி சமேதராய்ச்
சந்தித்துச் சேவித்து...
காட்டய் அழித்துத்
தோட்டம் போட்டுப்
பாட்டய் சமய்த்தவர்
நாங்கள் அல்ல-எங்கள்
பூட்டன் பூட்டிகளே!

❖ காட்டு வெளிப் பாதய்யிலே
கண்டெடுக்கப் பட்டுக்
காட்சிக்கு வய்க்கப் பட்ட
மண்டய் ஓடு – முறிந்த
முதுகு எலும்புகள் - எங்கள்
பூட்டன் பூட்டிகள்
உடய்யவய் அல்ல-அவர்களின்
பாட்டன் பாட்டிகளுடய்யவே!

❖ இப்பொழுது-
தேயிலய் ரப்பர் தோட்டங்களில்
முறிக்கப் படுவது மட்டுமே
இந்திய வம்சாவளித் தமிழராம்...
எங்கள் முதுகெலும்புகள்?
(Ascendants and Descendents)

***



- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்
(ஆர். முத்துக்கருப்பன்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 21. சலச-ல/லி-ப்பு?

❖ பெல்மதுள்ளய் தோட்டத்துக்கு
உள்ளே நரிகள் புகுந்தே
தொல்லய் கொடுக்கத்
தொடங்கி விட்டனவாமே!



❖ தேர்தல் விரய்வில்
வருகிறது என்றே
தெரிவிக்க...
பெரிய நரிகள்
வருவதன் முன்னர்
சிறிய நரிகள்
புகுந்து சலசலப்பு!

❖ சின்ன பெரிய
நரிகள் எல்லாம்
எங்கள்
தேயிலய்த் தோட்டத்துக்கு
உள்ளே புகுந்து
அதன்
வல்லமய்யய்க் காட்டுவது
நல்லதுக் கல்ல மக்காள்!





❖ வேட்டுச் சத்தத்துக்குப்
பயந்து நடுநடுங்கியே
வீட்டய்ப் பூட்டிவிட்டு
எங்கோ... அப்போ...
ஓடி ஒளிந்திருந் தோரும்

ஆக்கங்கள் : 36
பக்கங்கள் : 68+04=72
பிரதி விலை : ரூ.275/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ...
ஓட்டு வேட்டய்க்கே
வீடுவீடாக வருகய்?



❖ தோட்டக் காடுகளும்-சிங்கள
நாட்டுப் புறங்களுமே
இத் தேசத் துரோகிகளின்
வேட்டய்க் காடு!

❖ நாட்டுக்குப் போயி
கள்ளுத் தண்ணியே "புல்லாப்"
போட்டுப்புட்டு வந்து
நாம இவனுகளே
செருப்பாலே நாலு
போடு போட்டாத்தான்...
சொல்லித் திருத்த ஏலாது!

❖ சல்லிக்கும் சாறாயத்துக்கும்
பல்லிளிச்சி-இவனுக
பின்னாலே போற
பயசிறுக்கிகளய்யும்
புடிச்சி ஒதெச்சிப்
பல்லே ஒடய்க்காட்டி...
சொல்லிச் சரிப்படாது?

❖ நாட்டுச் சனமும்
தோட்டச் சனமும் சேர்ந்து
நரிவேட்டய் ஆடும் நாள்
நாளய் வரவேணும்!
(Workers and farmers unity)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. சிந்தனய்க்கு...

❖ இந்து பவ்த்தம் என்ற
இரு மதங்கள் மட்டுமே
ஈரேழு மறுபிறவியய்
நம்புகின்றன வாமே?



❖ இந்து பவ்த்த மதத்தினர்
இறந்து-பின்னே
வேறு மதத்தவராயும்...
வேறு மதத்தினர்-இறந்து
இம் மதத்தினராகவும்
பிறக்கலாமே?

❖ உயர்ந்த தாழ்ந்த
சாதிப் பிரிவினரும்-இறந்து
ஒத்துமாறிப் பிறவாரோ?



❖ இந்துமதப் பித்தர்களின்
செயலய் வெறுத்ததால் தான்
சித்தார்த் சிந்தித்தே
புத்தன் ஆனான்!

❖ புனித பவ்த்தமும்-இங்கே
புளுகர் புரட்டரின்
புகழிடமாகி...
புத்த பிக்குமார்
பழிச்சொல்லுக்கு
இலக்காக்கலே?
(Monkish Pranks)



***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. வி(மர்)சனம்...



❖ சேப்படிச் சித்தரின்
கய்வரிசய் இப்போ
எங்கள் சிரிலங்காவின்
தலய்நகர் சந்து சந்திகளில்
பரந்து விரிந்து
சிறந்து வளர்வதாக
ஒரு கொழும்புச் செய்தி
விரய்ந்து பரவுகிறதே!

❖ நாட்டின் பொருளாதார
வளர்ச்சியின் சிறப்பய் இது
ஒன்று மட்டும் காட்டப்
போதாதா? என்று கேட்டால்
பொறுத்திருந்து பார்ப்போம்
போகப்போகத் தெரியும்-இன்னும்
வரப்போவதய் எல்லாம் என்றே
விவரிக்கிறார்கள்!



❖ சோசலிசமுமே
உலகெங்கும் இப்போ
பரந்து விரிந்து
தோல்வி அடய்கிறதே என்றே
சிலர் சொல்லுகிறார்களே...
என்றே கேட்க-இங்கே
உள்ளது மாத்திரம் என்ன
உருப்படி யானதா? என்றே-எம்மய்த்

- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்

**CONTRAST**
**(Poetry)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பிக் கேட்டே
திணரடிக்கிறார்கள்!

❖ கண்ணாடி
வீட்டுக்குள் இருந்தே
கல்லெறியும்
மடச் சாம்புராணிகள்
என்றும்...
எம்மயச் சிலர்
ஏளனஞ் செய்கிறார்கள்!

❖ கெட்டுத் தொலய்ந்து
குட்டிச் சுவற்றுக்குள்
விழுந்து கிடக்கும் கழுதய்
தலய்யய்த் தூக்கி
எட்டிப் பார்த்துக்
கேட்டதாம்...
"எப்படி சுகம்?"
(Escapism)

***



24. <u>நெஞ்சம்!</u>

❖ ஈர நெஞ்ச முடய்யார்
இங்கு யாரும் இல்லய்!
எம்மய்
வேரோடு அறுக்கத்தானே
விதவித வேலய்த் திட்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கப்பலில் ஏற்றி
அனுப்பி விட-நல்ல
காலம் கனியும் என்றே
கால் கடுக்கக்
காத்திருந்தும்-அது
கனவாகிப் போனதால்
இதோ! கவலய்யில்
புது மாற்றுத் திட்டம்!

❖ சிரிமாவும் சாத்திரியும்-ஒண்ணாச்
சேந்து செஞ்ச
ஒப்பேத்துற ஒப்பந்தத்துலே...
செவப்பு இந்தியப்
"பாசுப்போட்டு" எடுத்தவுகளே
அரசாங்கச் செலவுலேயே
அக்கரய்க்குக் கப்பலேத்த
முன்னுக்கு வந்தாக...
என்னா! அன்பு பாசம்?

❖ ஒன்றரய் நூற்றாண்டு
உழய்த்த பரம்பரயில்
உதித்த சந்ததியினரய்
ஓட்டி விரட்டிவிட
நோட்டம்... நாட்டம்!

❖ ஈர நெஞ்ச முடய்யார்-என்றே
நாம் சிரிக்கவில்லய்-முழு
நாடே சிரிப்பு?
(Compassion)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. ஆசிரியர்

❖ சமூகத்துக்கு
இப்போதுதான்
சரியான பற்றும்
பாசமும் பிரவாகித்து
கரய் புரண்டு ஓடியே
கசிந்து வடிகிறது...
ஆசிரியர் மீது!

❖ சமூகக்
கடமயய் மறந்து
அற்ப சலுகய்க்காக
ஓய்வு பெறுவது
சரியல்ல வென்றும்...
தலய் கீழாகச்
சிலர் நின்றே
பெரிய கூச்சல்!



❖ சமூகம் ஆசிரியரய்ச்
சரியாக மதித்திருந்தால்...
சட்டி சுட்டதடா!-கய்
விட்டதடா! என்றே
தொழிலய் விட்டுவிட்டு
ஓடுவார்களா?

❖ காலங் கடந்த
ஞானத்தால் எக்

**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியமும் நடவாது என்ற
பேருண்மய்யய்ப் புரியாது
காரியம் பண்ணிவிட்டு-வீண்
கதய் அளப்பே!



❖ ஊர் வாய்க்கு
ஒத்து இப்போ
ஓய்வு பெறாது விட்டால்
உதவிக்கு நாளய்
வருவார்கள் என்ற
உத்தரவாதம் உண்டா?

❖ ஓடுபவன் எதய்யும்
பாடிக்கொண்டு ஓடுவான்...
உனக்கு எங்கேடா?
புத்தி போச்சு என்றே
சாடுவார்கள் பின்னே?

(Converse)

***

## 26. தேதி குறிப்பு?



❖ அரச-
ஆட்சியய்க் கய்ப்பற்றி
ஆட்டிப் படய்த்திட
ஓட்டுப்பெற வரும்
வேளய் மட்டும் -நம்மில்
வேற்றுமய் இன்றியே
ஒன்றுபட்டால் அன்றோ
நன்மய்கள் உண்டென
ஓதிடுவார்!

- **கண்டி மு. ராமச்சந்ரன்** -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





❖ ஆட்சிக்கு வந்தவர்
அத்தனய் பேருமே
நாட்டய்க் கெடுத்துச்
சிதய்த்த தல்லால்-மக்கள்
நன்மய்கள் கண்டிட
என்னசெய்தார் என்றே
நாட்டுநிலய் பறய்
சாற்றிடுதே?

❖ கட்சி பலப்பல
காட்சி சிலச்சில
முட்டி மோதிடப்
பிரித்து வய்த்தே-எம்மய்
மட்டி மடய்யராய்
ஆக்கிவய்த்தே இவர்
இஷ்டப்படி நாட்டய்
ஈடுவய்ப்பே!



❖ சாதி மத இனப்
பேதம் பிரிவினய்யய்ச்
சப்பித் திரியும்
இம் மூடரய்யே - நாம்
மோதி மிதித்தே
முன்செல் லாவிடில்
நாதியற் றிங்கு
நாம் நலிவே!

**கண்டி எம். ராமச்சந்ரன்**
**- ஈவெராதாசன் -**
**(ஆர். முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ உழய்த்திடும் உத்தமர்
ஒன்றுபட் டிங்கே
உரிமய்கள் வென்றிடும்
நாள் வரய்க்கும் - இங்கு
உண்டாவ தில்லய்
உண்மய்ச் சுதந்திரம்-இவ்
உண்மய் உணர்திடும்
தேதி எப்போ?
(Enlightenment)

***



27. பாரத நாடு?

❖ சாதிகள் ஆயிரம்
உண்டு என்றே – அன்று
ஓதிவிட்டே சென்ற
பாரதியே!-உன்னய்
ஓராயிரம் முறய்
வாழ்த்திடலாம் - உண்மய்
உள்ளபடியே நீ
சொன்னதனால்!



❖ சாதிகள் இல்லய்யடி
பாப்பா!" வென்றே - சிறுமிக்கே
ஓதிவிட்டே நீ
சென்றதய்யும்-சிறுவர்
காதிலே போட்டிட
வில்லய்யடா!-வந்து
கண்ணய்த் திறந்தே
பாராயே!

- கண்டி மு. ராமச்சந்ரன் -
(ரா. முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சாதிப் பிரிவிடய்
சண்டய் முற்றி — அது
வீதிக்கு வந்து
மோதி முட்டித் - தீயில்
சாகின்ற சங்கடம்
காணுகின்றோம்! — நீ
சவக்குழி யுள்ளே
புரண்டு படு?

❖ பாரதி தாசனாம்
சுப்பு ரத்னம் - தான்
பாடிய தோடே
நின்றிடாமல் - ஆம்!
நேரடி யாகவே
நடய்முறய்யில் - அவன்
நிறுவிச் சென்றதும்
வீணாச்சே?



❖ முறுக்கு மீசய்க்
காரப் பாரதியே!-ஆம்!
நறுக்கு மீசய்கார
சுப்புரத்னம்!-இனி
மொட்டயாய் மீசய்யய்
சிறய்த்துவிட்டே — மறய்ந்து
முகத்தய் மூடி
ஓடிடுவீர்!

**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**
**(ஆர். முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❖ மான்யமுறய் சமு
தாயம் இன்று – உலகில்
மாறிவிட் டதென்
றாலும் என்ன! அதன்
வக்கிர ஆண்டான்
அடிமய் முறய்ச் - சாதிச்
சிக்கலி லிருந்து
விடுபடாது-பாரதம்
சிறுமை யுற்றே
காண்பீரே!

❖ வர்க்க முரண்பாட்டய்
வேட்டு வய்த்தே-இங்கு
தக்க முறய்யில்
தகர்க்கும் மட்டும்-சாதி
வக்கிரம் மேலும்
தொடர்கதய்யே- மார்க்சிசத்
தத்துவம் ஒன்றே
மாற்று வழி!

❖ ஏட்டுச் சுரய்க்காய்
பாட்டாலே - பாரதம்
மேட்டு வர்க்கக்
காப்பே தான் - இதய்
மாற்றும் நல்வழி – ஆம்!
மார்க்சிசமே!
(Solution as Marxism)

***





**- ஈவெராதாசன் -**
**கண்டி மு. ராமச்சந்ரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 28. மாட்சி?

❖ சாதிக்குச்
சங்கம் வய்த்தே
சதிராடித் திரின்ற
சழக்கருந்தாம் - சம
நீதி பற்றிப்
பேசல் கேளீர்!

❖ இனத்தால்
நாம் தமிழர்களாய்
இணய்ந்தே
செயல்படா விடில்...
விடிவில்லய் என்றுமே
வீண் விதந்துரய்ப்பே!

❖ தம்மதம் இதுவென்றே
தக்க வய்த்தே-போலியாய்...
எம்மதமும் எமக்குச்
சம் மதமே என்றே- ஊரய்
ஏமாற்றுவோரும் - ஆம்!
இவரே?



❖ தோட்டத்
தொழிலாளரய்ப் பல
கூறடித்தே...
தொழிற் சங்கக்
கடய் நடத்தும்

**கண்டி எம். ராமச்சந்ரன்**
**ஆர். முத்துக்கருப்பன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாதிச் சங்கத்
துரோகிகளாலும்-தொலய்
தொலய்யாது காண்!



❖ ஊரய்யே ஏமாற்றி
உலயில் இட்டே – உண்டு
உயிர்வாழும் களய்
கலய் இலக்கிய
உலுத்தராலும் - உண்மய்
இருட்டடிப்பே!



❖ தடி எடுத் தோனய்
எல்லாம் - ஆம்!
தொழிலாளர்கள்
தலவர் எனத்
தலய் வணங்கிச் - சீச்சீ!
தாழ்ந்தே போனார்!

❖ கழி எடுத்தே - இவர்கள்
இத் தலவர் கலஞர்களின்
தலயில் அடித்தே - புது
வழி செல்லும்
நாள் வரய்க்கும் - இவ்
வக்கிரம் தொடரே!





❖ தாடி வய்த்து
முன் வந்தோரய் - மார்க்சிசத்
தலவர் என மதித்தும்
மடய்யரானோம்?
(Pros and cons)

***

**- கண்டி எம். ராமச்சந்ரன் -**
**ஈவெராதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. பார்ப்பானய் அய்யன் என்ற...



❖ பாரதி அய்யரயப்
பயித்தியக்காரன்
இல்லய் என்றே-எந்தப்
பார்ப்பானும்
சொல்ல மாட்டான்!

❖ பூணூலயப்
பிய்த்து எறிந்த
புதுமய் பிராமணன் என்றே
அவனுக்குச் சிலர்
புகழாரம் சூட்டலாம்!



❖ ஆசாரப் படி-சுப்பய்யர்
சின்னச்சாமி அய்யர்-அவனுக்கு
அணிவித்த பூணூலய்
அவன் ஏன்?
பிய்த்து எறிந்தான்!

❖ பயித்தியக்காரன்
ஆனதனால் தானே?-தனது
தந்தய் தனக்கு
அணிவித்த வய்தீகப்
பூணூலயப் பிய்த்தெறிந்தான்!



❖ சாதிகள் ஆயிரம்
உண்டு என்றே-முன்னர்
சரியாகச் சொல்லிவிட்டுப்-பின்
“சாதிகள் இல்லய்யடி!-பெண்

**கண்டி எம். ராமச்சந்ரன்**
**ஆர். முத்துக்கருப்பன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாப்பா!" வென்றே
பாடி-பாதியிலே
கழுத்தறுத்த
பாவி!

❖ பூணூலின் -ஒரு அரய்
ஜாணய்க் கூட அறுக்க
எந்தப் பிராமணனும்
தயாராக இல்லய்?



❖ பாரதி தாசனும்-தான்
பார்ப்பானய்
இழிவு செய்தான்!-இது
பரவாய் இல்லய்-இவன்
பார்ப்பானன் இல்லய்யே?

❖ பார்ப்பானச்-சி
சுப்பிரமணிய
பாரதி அய்யரய்த்தாம்...
எந்தப் பிராமணனும்
மன்னிக்க மாட்டான்!

❖ அரிஜனர்
எனப் படுவோருக்குச்
சம உரிமய்
கொடுக்க வேண்டாம் என்றே
ஆர்பாட்டம் நடாத்தி...
அக்கினியில் குளித்தே-சில
பார்ப்பான இளய்ஞர்யுவதிகள்
சொர்க்கம் அருணாசலம் சென்ற



**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகக் கதய்யும்-பாரதம்
சொல்லி அழுகட்டுமே?



❖ சாதிமத சாத்திரச்
சடங்கு சம்பிரதாயம்
இல்லய் என்றால்...
'ஓம் சுக்கிலாம் பரதன'
சமஸ்கிரதம் ஓதி-பார்ப்பனர்க்கு
வயிர் வளர்க்க ஏது
வேறு வழி?



❖ கலியாணம் சடங்குசாத்திரக்
கருமாதியய் எல்லாம்-மக்கள்
கய் கழுவி விட்டால்-அவர்கள்
கய்யய்க் கடிக்காதோ?

❖ பிறப்புரிமய்யாக வந்ததே
பூணூல் என்றே - இவர்கள்
பிதற்றித் திரிகிறாரே?-எடு
செருப்பய்க் கய்களிலே!



❖ திராவிடக் கழகத்தய்ச்
சேர்ந்த சிலர்
கலகம் செய்தே
தெருவுக்கே வந்து-எங்கள்
பூணூலய்ப் பிடித்து
இழுத்து அறுத்ததய்ப்
புதினப் பத்திரி(க்)கய் சஞ்சிகய்
பொறுத்துக்கொள்ள மாட்டாது...

- கண்டி மு. ராமச்சந்ரன் -
(ரா. முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூணூலின்
தத்துவம்

பெண்களின் -
தாலியய்ப்பிடித்து இழுத்து
அறுத்ததய்ப் போல
தவித்துக் குரல் கொடுத்ததய்ப்
பற்றி உங்கள்
வயிறு தீப்
பற்றி எரியவில்லய்யா?

❖ முழு உலகமுமே-பார்த்து
மூக்கால் சிரிக்கும்-அதி
உத்தம தேசம்-உங்கள்
பாரதம் அல்லவா?
(Curse of Hindu Brahminism)

***

30. <u>கந்தா வடிவேலா...?</u>



❖ கதிர் காமப்
புனிதப் பிரதேசத்துக்கு
உள்ளே...
பல காலமாகக்
கசிப்பு வடித்து
விற்று வந்தோரய்ப்
போலிசார்...
கய்யும் மெய்யுமாகக்
கண்டு பிடிப்பாமே!



❖ "கந்தன் திரு
நிறணிந்தால்...
வந்த வினய்
ஓடி விடும்" என்றது

- ஈவெராதாசன் -
கண்டி மு. ராமச்சந்ரன்

எதிரும்

(கவிதய்க

ஆக்கங்கள்

பக்கங்கள்

பிரதி விலய்



முதல் பதிப்பு : 2011-10-22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்டு மிராண்டிக்
காலம்!

❖ "கந்தன்
திருத் தலத்தில்
கசிப்பய்
நாம் அருந்தின்
சொந்த துன்பம்
நீங்கிவிடும்
சொர்க்க சுகம்
உண்டாகும்" என்பதே
இந்தக் காலம்?

❖ அங்கே-
குடுகுடுப்பய்க் காரரின்
குறி சொல்வோரின்
இடத்தய் எல்லாம்
இப்போ
"குடு" வியாபாரிகள்
பிடித்து விட்டதாகச்
சில கிழம்
முருக பக்தர்கள்
முகஞ் சுழிப்பே!



❖ வெளிநாட்டு உல்லாச
சல்லாபப் பிரயா/பிரா-ணிகளுக்கு
சதய் விருந்தாவதற்குப்-பல
விலய்மாதர் வள்ளிகளின்



- ஈவெராதாசன் -

**கண்டி எம். ராமச்சந்ரன்**
**(ஆர். முத்துக்கருப்பன்)**

புதிரும்
ள்)
: *36*
: *68+04=72*
: *ரூ.275/=*

**வெளியீடு** : 2012-01-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாட்டமும் அங்கே
தடபுடலாமே?



❖ புனிதப்
பிரதேசம் என்றே
புகழப் படுவது-வெறும்
புளுகு என்றே தான்
புலப்படுகிறது!

❖ நல்லெண்ணெய்யய்-நல்ல
நல்லெண்ணெய் என்றால்...
உள்ளே ஏதோ
அசிங்கம் இருக்குதென்றே
அருத்தமோ?



❖ கதிர்காம யாத்திரய்
"சீசனில்"-கசிப்பு "குடு"வுடன்
கஞ்சா அபினும்
சுவய்த்தே...
"கந்தா வடிவேலா!-மச்சான்!
இந்தா படி
பய்லா!" என்றே...
இளய்ஞர் யுவதிகள்
காவடி கரகச் சிகரச்
சதுர் ஆட்டமே?





❖ மாறுவேடம் பூண்டு
சிங்கள சிரி வள்ளியய்
மணக்க வந்த கந்தன்
இப்போ...
(தமிழிலே இல்லாத
ஓசய்க்காக '7' சீர்திருத்தம்:
நெடில் 'ζ')
"அலுத் ஹூடயட"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இன்னொரு
வேடம் பூண்டு
காட்சி யளிப்பதாக
கதய் அடிபடுகிறதே?

❖ கோவணத்தய்க் கலய்ந்து
அம்மணமாக அல்ல...
"கிப்ஸ்" சாரம் அணிந்தாம்?
(இதுவும் சீர்திருத்தமே)

❖ "கதிர்காமக் கந்தனுக்குக்
காணிக்கய் போடுவீர்!" என்றே
காவடி ஆடி வருவோரும்-மாலய்யில்
கள்ளுக் கொட்டில் குடிலில்
கண்சிவந்தே-மாலய்யுடன்
காட்சியாமே?



❖ அதோ!
"யாமிருக்கப்
பயமேன்? எனும்
அபய வாசகத்துடன்
கந்தனின் திரு உருவத்
தனிப் படம்
கோவணம் வேலுடன்
தூக்கில் தொங்குவது...
கண் கொள்ளாக்
காட்சியே!-தண்ணி
"லெவலிலே"?
(Toast for Kandan)



***

**கண்டி எம். ராமச்சந்ரன்**
**ஆர். முத்துக்கருப்பன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. மதமாற்றம்?



❖ ஹரிஜனர்கள் மதம்மாறிப்
போகின்றாரே...
அய்யய்யோ! ஆகாது
வேண்டா மென்றே
நரியூளய் இடுவதனால்
பயனு முண்டோ?
உம்மதத்தில் பிழய்உண்டு
திருத்தம் செய்வீர்!

❖ எம்மதமும் உயர்நீதி
உரய்க்குதென்பார்
எவனுமே பின்பற்றி
வாழ்ந்தா னில்லய்
எம்மதந்தான் பெரிதென்றே
பெருமய் பேசி...
பின்னடய்வு கண்டதல்லால்
நன்மய் இல்லய்!



❖ சாத்திரஞ் சாதிசடங்கே
மதம்என் றெண்ணிச்
சண்டயிட்டுத் திரிவதய்யே
காணு கின்றோம்!
தோத்திரம் பாடுதற்கும்
துண்டு பட்டே
சண்டய் சச்சரவு
குடுமி பிடியே?

- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்
(ஆர். முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❖ பிறப்பாலே உயர்வுதாழ்வு
பேசு கின்ற - படு
பிற்போக்கு மதத்தய்யே
புறத்தே ஒதுக்கி...
பிறமதத்தய் தழுவுவதோ
அவனவன் உரிமய்!
பிழய்யதுவென் றுரய்ப்பதற்கு
எவனுக் குரிமய்?



❖ இருந்தமதம் விட்டுவிட்டு
இன்னொன் றுக்கு
ஏன்தாவு கின்றார்கள்?
எண்ணிப் பாரீர்!
இருந்தமதத் தில்பிழய்கள்
இருக்கு தென்றே
ஏன் உணர நீர்மறந்து...
வீண்பழி பிறர்மேல்?

❖ மக்களின் தேவய்க்கே
மதங்கள் இன்றி...
மதங்களின் தேவய்க்கோ
மக்கள் இல்லய்!-மக்கள்
மாக்கள் இல்லய்?



❖ மரியாதய் மானமெல்லாம்
போனால் என்ன!
மதத்தய்மட் டும்காப்போம்
சிதய்வின்றி "மியூசியத்தில்"
(Preserve Religion)

***

**- கண்டி மு. ராமச்சந்ரன் -**
**(ரா..முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. இனங் காண்பீர்!

❖ தோட்டமெனும் இருட்டறய்யில்
தொடர்ந்தும் உன்னய் அடய்த்துவய்த்து
"ஓட்டய்" அப கரித்து ஏய்க்கும்
உலுத்தர்களய் இனமேகாண்பாய்!

❖ உணவு உடய் குறய்பாட்டோடு
உரிமய்அற்ற நடய்ப்பிணமாய்க்
கனவுலகில் உன்னய்வய்த்த
கயவர்களய் இனமே காண்பாய்!

❖ கல்விளட்டாக் கனியாக்கிக்
கண்குருடராய் ஆக்கிவய்த்தே
பல்லிளிக்கும் பதடிகளய்யே
பாதகராய் இனமே காண்பாய்!

❖ தொழிற்சங்கக் கடய்நடத்திச்
சொத்துச் சுகம் சேர்த்ததமிழ்
தலவர்மந் திரிகளய்யே
சழக்கர்களாய்ச் சாடுவாயே!
(Identify Crooks)

***

## 33. பந்தம் சுடும்?

மாலய்யுடன் கய்ச்செண்டு
மேள தாளம் - கூலிக்கு
மாரடித்தே உயிர்வாழும்
பலரய்க் கூட்டி
காலய்முதல் மாலய்வரய்
வீதி யோரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்கின்றான் மலய்மன்னன்
கால்க டுக்க!

❖ தலய்மகனோ கார்நிறுத்திக்
கீழே இறங்க
தலய்தழுவி கால்கழுவி
கய்கொ டுத்தே
தலய்வழியே மாலயிட்டு
மகிழ்வித் தேதான்
தான்பெரியன் என்றேதான்
தலய்நி மிர்வான்?

❖ கார்அந்தோ வருகிறது...
கடு கெதியில்...
கால்கழுவ மாலய்சூட்ட
"நீ நான்" சண்டய்?
யார்யாரோ பார்த்தார்கள்
நாட கத்தய் - அந்தோ!
கார்வந்து நிற்கவில்லய்
ஏமாற் றந்தான்?



❖ ஏமாற்றம் அவமானம்
எஞ்சி மிஞ்ச
ஏசுகிறான் பேசுகிறான்
ஏதற்கோ? ஏனோ?
ஏனாம்இவ் அசிங்கமே
இழிந்த வேடம்!

**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**
**(ஆர். முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிப்பார்த்த இலாபங்கள்
இதிலே என்ன?

❖ படக்கலய்ஞர் பத்திரி(க்)கய்
பதர்கள் சூழ
கடய்முதலா ளிபலருமே
கூடி நின்றார்!
பத்திரி(க்)கய் செய்திபடம்
காண வில்லய்!
பத்திரிகய் நிருபர்கய்யய்ச்
சுடுமோ பந்தம்?
(Publicity crave)

***

## 34. ஒரு கோப்பய்யிலே... என்...?

❖ குடிச்சிக்
கூத்தாடி
குடுமியெப் புடிச்சி...
இழுத்து
அடிச்சி
ஒதெச்சிக் கிட்டு...
மண்டய்யே
ஒடெச்சிக் கிட்டு...
ஏண்டா? நீங்க
உருப்படாமேப்
போறீ கண்ணு
நடப்பெக் கேட்டா...



**- ஈவெராதாசன் -**
**கண்டி எம். ராமச்சந்ரன்**
**(ஆர். முத்துக்கருப்பன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நீ ஆரு ஓய்?
அதெக் கேக்கண்ணு...
கய்யெக் காலே
நீட்டி அசச்சீ...
ஊத்தய்ப் பேச்சுலே
பேசிக் கிட்டு...
நின்ன எடத்துலேயே
நின்னுக் கிட்டே...
"என்னெ நீ
யாருண்ணு நெனெச்
சே"ண்ணு...
பின்னிப் பின்னிச்
சுத்துறானுக...
கம்ம நாட்டிப்
பயலுக!



❖ சண்டெ இவனுக
புடிச்சிக் கிட்டு
சங்கய் கெட்டுத்
திரியாட்டி...
தொழில்
சங்கத்துக்கு இங்கே
வேலய் எது?

❖ மண்டயய்
ஒடெச்சுக் கிட்டு

- ஈவெராதாசன் -
கண்டி மு. ராமச்சந்ரன்
(ரா. முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து கட்ட
ஆசுப் பத்திரிக்குப்
போறத்துக்கு முன்னாடி
போலீஸ் இஸ்டேசனுக்குப்
போறத்துக்கு
இவனுகளேக்
கூட்டிப் போறது
தானுங்களே...
எங்க தொழிலாளர்
சங்கத் தலய்வர்
வேலய் - வேறே
ஏது? வேலய்!



❖ கோட்டு வரய்க்கும்
போகாட்டி
கறுப்புக்
கோட்டுப் போட்ட
புரக்டரு மாருக்கு
"பீசு" யாரு ஓய்?
குடுப்பா!



❖ சங்கத்
தலய்வருக வுட்டு
சப்போட்டுலே
தானே லே!
சாதிக்கு கூதிக்கூண்ணும்
சங்கம்?-அதோடே...



**ஈவெராதாசன்**
**- கண்டி எம். ராமச்சந்ரன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாறய "பியர்"
கள்ளுக் கடய்யும்
ஜோரா நடக்குது!

❖ குடிச்சிக் குடிச்சே
குட்சிச்
"சுவராவே" தான் போவோம்...
புடி பந்தயம்!
எவ்வளவுங் குறானுக?
விடு ஓய்!
சும்மா ஆளே!

❖ சிந்திக்க நாம
ஆரம் பிச்சா
சந்தி
சிரிக்குமுண்ணு தானே...
நம்மலே எல்லாம்
சாறாயத்துலே
குளுப்பாட்டு றாக...
நம்ம தொழில்
சங்கத் தலய்வரு
மாறுக?

❖ கலெ எலக்கிய முண்ணு
கதெச்சுக்கிட்டு திரியிற-செல
கம்மநாட்டிப் பயலுகளும்
இவனுகளுக்கே
கய்குடுத்து ஒதவிக்கிட்டு

- ஈவெராதாசன் -
கண்டி மு. ராமச்சந்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாலே பின்னாலே
கய்யேக்
கட்டிக்கிட்டு தானேஓய்!
நிண்ணு-பொக்கய் வாய்
பல் லிளிப்பூ?



❖ வெங்கம் பயலுக
சங்கத்துக்கு நாம
சந்தாக் கட்டிக்
கிட்டே இருந்து
மங்கிப் போனோம்...
மச்சான்!-இந்த
வெங்காய
வேலய்யே உட்டுப்
புட்டு-வேறே
வேலய்யப் பாரு!
(Round the Rut)

***

35. <u>**விடிவய் நோக்கி?**</u>
(பேராதனய் பல்கலய்க்கழகத்தில்-1984-ல்)

❖ விடிவுண்டா? தமிழனுக்குப்
பார்க்கின்றேன் தொடுவானத்
தொலய்வய் நோக்கி...
குமிழ் குமிழாய்த்
தெரிவ தெல்லாம்
குன்றும் குழியாய்
குறய்கள் தாமே?

❖ காட்டிக்
கொடுக்கும் இனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனந்தான்-இதய்க்
கற்றுக் கொள்வதற்கு
உடனே வாரீர்!
போட்டிப்
பரீட்சய் பல
நடத்தினாலும்-உயர்
புள்ளி பெறும்
திறமய் எல்லாம்-இத்
தமிழருக்கே?

❖ கூட்டித் திரிந்த-நரிக்
கூட்டங் கண்டேன்!
ஓட்டுப்பெற நாயின்
வேட்டய் கண்டேன்!

❖ மந்திரி அமய்ச்சர்மார்
அடி வருடப்-பூ
மாலயும் கய்யுமாகத்
தந்திரமாய்ப்
பல்லிளித்தே
போனார்! கண்டேன்!

❖ மலயகத்தில் ஓர்வெடிப்புத்
தலய்யில் கண்டேன்!
மட்டக் களப்பினிலே-தலய்
மயிரய்க் காணேன்!
திரு மலய்யில்
திரு வற்ற
தெருவய்க் கண்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளன, நலவன், பறய்யன்...
நானறியா தெத்தனய்யோ?
முடய் நாற்றம் மயங்குகிறேன்!

❖ வேட்டிகட்டி வருபவனய்
வெளியிலே நிற்க வய்த்து-ஓசிச்
சூட்டுடுத்து வந்தோனய்-நடு
வீட்டுக்குள் அழய்த்துவரும்
விளக்கம் கண்டேன்!

❖ சாதி இடப் பிரிவாலும்
சாடுதலும் ஓடுதலும்-தக்க
சமயத்தய்ப் பார்த்திருந்து
சண்டய் இடலும் கண்டேன்!

❖ பாரதி அய்யர் அன்று
பாடிய பாப்பா பாட்டய்ப்
பாடமாக்கி-நீங்கள்
பாடிக்கொண்டு ஓடுவதால்
பயனுண்டா? சொல்வீரே!



❖ பின் வந்து
அவன் தாசன்-எங்கள்
சுப்புரத்னம் சொன்னதய்யும்
சொல்லித் திரிவதனால்
சுகம் கண்டீரா?



❖ எங்கு தான்? உம் தமிழர்
சங்கமிந்து வாழுகின்றார்!
சென்ற இடமெல்லாம்-சாதிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றுச் சகதியிலே
சிறுமய் சீரழிவே?

❖ தலய்யுள்ள தலய்வரெல்லாம்
திலய்மறய்வில் உள்ளாரோ?
தொலய்வரய்யில் பார்த்தாலும்-ஒரு
தலய்யயும் காணோமே?

❖ உள்ளொன்று வய்த்தே
புறம்ஒன்று பேசுகின்ற
உத்தமத் தலவர் கலய்ஞர்
ஊர் நாடு முழுதுமே
உயரத்தின் காண்பீரே!

❖ வேடந் தரித்தொருவன்-தெரு
வீதியிலே வலம்வந்து-பொய்ப்
பாடம் படிக்கய்யிலே
பகலிலே பிடிபட்டான்?

❖ இல்லாரய் உள்ளார்கள்
ஏய்ப்பதுவும் மேய்ப்பதுவும்
எங்குமே காணுகின்றோம்...
எம்தமிழர் விதிவிலக்கா?

❖ அடிப்படய் உரிமய் இன்றி-எங்கும்
அடிபடும் உரிமய்யோடு
இடர்படும் தனிஇனமே!-ஆம்!
செந் தமிழ் இனமே!

❖ குடுமிபிடி குத்துவெட்டு
கொள்ளய் கொலய்களுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்டிக் கொடுப்பு
கழுத்து அறுப்புடனே…
நலிவுற்ற நல் இனமே-செந்
தமிழ் இனமோ?



❖ அத்தனய்யும் கூட்டிக்
கழித்தே முடிவெடுத்தேன்…
சத்துச் சாரமாக-ஆம்!
மொத்தமே!

❖ உழய்த்திடும் மக்களின்கய்-ஓங்கி
உயர்ந்திடும் அந்த நாளே…
மொழிஇன மதபேதத்தய்ப்-போக்கி
முகிழ்த்திடும் விடிவு நாளே!
(Workers of the world unite)

***

## 36. சய்னீஸ் பாணி…

(அ) தாடி வளர்த்த
கேடி களய்யே
"மா(ர்)க்சிஸ்ட்" எனநம்பி…
மோசம் போனோம்!



(ஆ) மந்திரி அமய்ச்சருக்கு
மாதச் சம்பளமும்
ஓய்வூதியமு மாமே…
கய்யுறய் கவசம்?

(இ) வேடமிட்டு வந்த
சோ/மோ-சலிஸ்டுகளாய் நம்பி
தொழிலாளர் விவசாயிகள்…
மோசம் போனார்?
(Dupe Marxists)



***

- கண்டி எம். ராமச்சந்ரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : 47. எதி / புதி ~ ரும்...
(கவிதய்கள்)

ஆசிரியர் : கண்டி எம். ராமச்சந்ரன்

முதல் பதிப்பு : 2011-10-22

வெளியீடு : 2012-01-07




...க்காங்கள் : 36

...க்காங்கள் : 68+04=72

...ிரதி விலய் : ரு.275/=

# எதி / புதி ~

# ரும்...

## (கவிதய்கள்)

- ஈவெராதாசன் -

கண்டி. மு. ராமச்சந்ரன்

(ஆர் முத்துக்கருப்பான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org